Tyre Manufacturing Industry

* 105 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government propose to establish a Tyre Manufacturing Industry in Tiruppathur, Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

டயர் தொழிற்சாலை

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் டயர் தொழிற்சாலை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆண்டொன்றுக்கு 3 லட்சம் மோட்டார் டயர்களையும், டியூப்புகளையும் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ 1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்திய அரசு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை கூட்டுத் துறையில் அமைப்பதற்காக தனியாக 'தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்' என்ற ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்பத்தூர் தாலுக்காவில் தக்கதோர் இடத்தில் இத்தொழிற்சாலை அமைக்கப்படும்.

Nib Industry in Sathur

* 106 Q.—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Nib Industry in Sathur, Ramanathapuram district is running at profit; and

(b) whether there is any proposal to establish a Pen Industry in the public sector in Sathur itself?

1972 ஆகஸ்ட் 19]

சாத்தூரில் நிப்பு தொழிற்சாலை

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூரில் நிப்பு தொழிற்சாலை லாபகரமாக நடைபெறுகிறதா ?

(இ) அதே ஊரில் அரசுத் தரப்பில் பேனா தொழிற்சாலை அமைக்க ஏதேனும் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) சாத்தூர் கூட்டுறவு நிப்பு தொழிற்சாலை நலிந்த நட்டத்தில் இயங்கி வருகிறது. தற்பொழுது இந்த நட்டம் குறைந்து வருகிறது.

(இ) தொழில் வணிக இலாகாவைப் பொறுத்த மட்டில், சாத்தூரில் அரசுத் தரப்பில் பேனா தொழிற்சாலை அமைக்க செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

MR. CHAIRMAN: Questions 72 to 74 are postponed.

N. M. High School, Elayirampannai

* 75 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any petition from the Assistants of the N.M. High School, Elayirampannai (Virudhunagar Educational District) alleging irregularities in the management of the school; and

(*b*) if so, the action taken thereon ?

ஏழாயிரம் பண்ணையிலுள்ள என். எம். உயர்நிலைப் பள்ளி

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழாயிரம் பண்ணையில் (விருதுநகர் கல்வி மாவட்டம்) உள்ள என். எம். உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தில் முறைகேடுகள் இருப்பதாகக் குற்றம் சாட்டி மேற்படி பள்ளி உதவியாளர்களிடமிருந்து மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?